எதிர்வரும் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான

# விசேட இடர்கால செயற்றிட்டம் - 2021

## மாதிரி வினாத்தாள் – II

தரம் - 11 | **தமிழ்மொழியும் இலக்கியமும்** | புள்ளித்திட்டம்

### பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 2 | 11) | 3 | 21) | 3 | 31) | 4 |
| 02) | 3 | 12) | 2 | 22) | 2 | 32) | 2 |
| 03) | 4 | 13) | 3 | 23) | 4 | 33) | 2 |
| 04) | 2 | 14) | 4 | 24) | 3 | 34) | 4 |
| 05) | 4 | 15) | 3 | 25) | 2 | 35) | 2 |
| 06) | 3 | 16) | 3 | 26) | 4 | 36) | 3 |
| 07) | 4 | 17) | 4 | 27) | 2 | 37) | 2 |
| 08) | 1 | 18) | 1 | 28) | 3 | 38) | 3 |
| 09) | 4 | 19) | 3 | 29) | 1 | 39) | 1 |
| 10) | 2 | 20) | 3 | 30) | 3 | 40) | 1 |

(40 x 1 = 40 புள்ளிகள்)

### பகுதி - II

01) (1) நான் + ஈங்கு + புகலும் + மொழி + நல் + கிளியே + கூறாயே

(2) திருக்குறளில் உள்ள ஒவ்வொரு குறளும் அறிவூட்டுவதாய் இருந்தது.

(3) மகனே நீ வெய்யிலுக்குள் வராமல் தங்கையை பார்த்துக் கொள்

(4) பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையால், நாவலர் எழுந்தார் எனும் கட்டுரை எழுதப்பட்டது.

அல்லது

நாவலர் எழுந்தார் எனும் கட்டுரை பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளையால் எழுதப்பட்டது.

(5) எழுவாய் - அன்பின் ஊற்று

பயனிலை - கழுவி விடும்

(6) பெயர் - மன்னனின் முடிசூட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

வினை - நீ இவ்வேலையை செய்து முடி

(7) அ - அறிவித்தல்

ஆ - அறிவுறுத்தல்

(8) பிரதியுபகாரம் செய்தல்

(9) புழுங்கல் - தொழிலாகு பெயர்

(10) பேசாது

(10 x 2 = 20 புள்ளிகள்)

02) (1) கட்டுரை

தலைப்பு - கொரோனாவும் மாணவர் கல்வியும் / கொரோனா தாக்கத்தால் மாணவர் கல்வியில் ஏற்பட்ட தாக்கம்

முகவுரை - கொரோனா பற்றிய சுருக்கமான முன்வைப்பு

சவால்கள் - பாடசாலைகள் மூடப்பட்டிருத்தல்
தனியார் கல்வி நிலையங்கள் மூடப்பட்டிருத்தல்
நேரடி கல்வி வாய்ப்பின்மை
குடும்ப பொருளாதார நிலைகுலைவு வருமானம் இன்மை
தொழில்நுட்ப சாதனங்கள் இல்லை
வைபர், சூம் செயலிகளில் இடையூறு ஏற்பட்டு கல்வி தடைப்படல்

தீர்வு - சுயகற்றலில் ஈடுபடல்
நண்பர்களுக்கிடையிலான கலந்துரையாடல் கற்றல்
சந்தேகங்களை ஆசிரியர்களிடம் தனிப்பட்ட முறையில் தீர்த்தல்

முடிவுரை -

(2) தலைப்பு - போதைவஸ்துப் பாவனையை ஒழிப்போம் / போதையற்ற உலகை கட்டியெழுப்புவோம்.

- ✶ சர்வதேச போதை ஒழிப்பு தினம் பற்றிக் குறிப்பிடல்
- ✶ போதைவஸ்து ஒழிக்கப்பட வேண்டியமைக்கான காரணங்கள்
- ✶ பஞ்சமா பாதகங்களில் ஒன்று
- ✶ குடும்பங்களின் சீரழிவு வறுமை
- ✶ பண்பாட்டுச் சீரழிவு
- ✶ சமூகத்தில் மதிப்பிழத்தல்
- ✶ உயிர் கொல்லி
- ✶ தனியொருவரின், சமூகத்தின், நாட்டின் அபிவிருத்தி போதையற்ற உலகிலேயே தங்கியுள்ளமையை குறிப்பிடல்

(3) உரையாடல் தலைப்பு

ஊடக அறிவும் நூலறிவும் / நூல்களே நல்லாசான் / இணையமே உயர் அறிவு தரும் / எது சிறந்த வாசிப்பு ஊடகம்

- ✶ உரையாடல் பண்புகள் பேணப்படல் வேண்டும்
- ✶ இணையம், தொலைக்காட்சி முதலிய ஊடகங்களினூடாகப் பெறப்படும் அறிவு
- ✶ இற்றைப்படுத்தப்பட்டதாகவும் இலகுவாகவும் பெறக்கூடியதாக இருக்கும்
- ✶ விரல் நுனியில் பூமிப்பந்தை வருவிக்கும் ஆற்றல் உண்டு

* தரவிறக்கம் செய்தல், சேமித்து வைத்தல், வேறொருவருக்கு அனுப்புதல், பிரதி எடுத்தல் போன்ற நன்மைகள்

இணையம், தொலைக்காட்சி முதலானவற்றுக்கு ஆதாரம் பேசுபவர் இவற்றை முன்வைக்கலாம்.

நூல் வாசிப்பினூடாக கிடைக்கப் பெறும் அறிவு

* வரலாற்றுக் காலம் தொடங்கி அறிவைப் பெருக்கும் தன்மையொன்று
* வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்தி அறிவைப் பெருக்கலாம்.
* சுவையும் சுவாரஸ்யமும் கிட்டும்
* வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்
* தேவைப்படும் நேரத்தில் நூல்களைப் பயன்படுத்த முடியும்.

*(4)* சிறுகதை அமைப்பு

பொருத்தமான தலைப்பு - பாலைவனப் பசுந்தளிர்

முகவுரை - கிராமச் சூழல் காட்டுதல்
பிரதான குடும்பம் அறிமுகம்
தந்தை இழப்பு

உள்ளடக்கம்

* தந்தையை இழக்கும் சந்தர்ப்பம்
* குடும்ப வறுமையால் கல்வியை கைவிடல்
* உறவுகளிடம் இரப்பதும் அவர்கள் உதறிவிடலும்
* சிறந்த நட்பும் ஆசிரிய வழிகாட்டலும் கிடைத்தல்
* வறுமையிலும் வைராக்கியமாகவும் செம்மையாகவும் வளர்தல்
* கல்வியால் உயர்நிலை
* உறவுகளும் ஊரவரும் வியந்து நிற்றல்

*(25 புள்ளிகள்)*

*03)* சுருக்கம்

ஆங்கிலத்தைப் படிக்க வேண்டும் எனக் கூறுவேன். அதிலேயே அறிவுண்டு. அதுவே வாழ்விற்கு வழிகாட்டுவது என்பன போன்றவை ஏற்க இயலாதவை. பிறநாட்டைச் சேர்ந்தவர்கள் ஆங்கிலம் கற்று அறிவை வளர்த்துக் கொள்ளவில்லை. வள்ளுவர் முதலானோர் ஆங்கிலம் கற்றனர். அகிலம் போற்றும் காவியங்களை தந்தனர். ஆங்கில மொழியே கல்விக்குரியது என்பது இயற்கையும் இல்லை ஏற்கத்தக்கதும் இல்லை என்பதை உணர்ந்து தாய்மொழியிலேயே கற்கலாம் என திரு. வி. கல்யாண சுந்தரனார் கூறுகிறார்.

*(10 புள்ளிகள்)*

04) கிரகித்தல்

(1) தாழ்வுச் சிக்கலின்றி, வெட்கம், பயம் அனைத்தையும் மறந்து அனைவருடனும் சுமுகமாக உரையாடும் பண்பு

(2) பாடசாலை

(3) துணிவுடன் தன் திறமையை வெளிப்படுத்தல் குழுச்செயற்பாட்டில் ஈடுபடல், வகுப்பறையில் பாடமுன்வைப்பை மேற்கொள்ளல்

(4) மொழித்திறன் போட்டிகள், கணித, விஞ்ஞான போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள்

(5) விட்டுக் கொடுப்பு, புரிந்துணர்வு, ஒற்றுமை, பொறுமை

(5x 2 = 10 புள்ளிகள்)

05) கடிதம்

அமைப்பு - முகவரி, உள்முகவரி, விளிப்பு, தலைப்பு, முடிப்பு, ஒப்பம்

உள்ளடக்கம்

- ✶ இன்றைய இளைஞர்கள் நாளைய உலகத்தை உருவாக்கும் சிற்பிகள்
- ✶ விவசாய தொழில் கேவலம் என்று நினைப்பதை நீக்குதல்
- ✶ வயிற்றுக்கு உணவு போடுவது விவசாயம்
- ✶ உணவுப் பொருள் இறக்குமதிக்காக அன்னியச் செலாவணியை விரயம் செய்தல்
- ✶ இளைஞர்கள் மனப்பான்மை மாற்றி விவசாய தொழிலை நாட வேண்டும்.
- ✶ இரசாயன உரப்பாவனை தீங்குகள்
- ✶ சேதனப் பசளைப் பாவனை நன்மை

**அல்லது**

துண்டுப்பிரசுரம்

- ✶ அமைப்பு
- ✶ கவர்ச்சியான தலைப்பு, விளிப்பு
- ✶ வெளியிடுபவர் பற்றிய விபரமும் திகதியும்

உள்ளடக்கம்

- ✶ காற்று, நிலம், நீர் முதலானவற்றை மாசடையாமல் வைத்திருத்தல்
- ✶ பாதக விளைவுகள் - நோய் ஏற்படல்
  சுற்றாடலின் அழகு கெடல்

கட்டுப்படுத்தல்

- ✶ அரசாங்கத்துடன் இணைந்து கழிவு மீள் சுழற்சி முறையை மேற்கொள்ளல்
- ✶ மாசடைதல் சம்பந்தமாக விழிப்புணர்வுச் செயலமர்வுகளை ஒழுங்கு செய்தல்
- ✶ சிரமதானங்களை ஏற்பாடு செய்தல் (வீடு, பாடசாலை, சுற்றாடல்)
- ✶ ஊடகங்களை பொருத்தமுற தொடர்புபடுத்தல் (15 புள்ளிகள்)

## பகுதி - III

01) (1) அ) தெளிவாகத் தெரிகின்ற ஆலமரம்

ஆ) வெற்றிவேற்கை அல்லது நறுந்தொகை

(2) அ) ஆயிரம் யானைகளை அடக்கி வெற்றி பெற்ற வீரனைக் குறித்து பாடப்படுகிறது.

ஆ) மனப்பாடம் செய்தல்

(3) அ) வெற்றிமாலை சூடிய தலைவனே (பரதன்)

ஆ) கோசலை

(4) அ) திணை - மருதம்

துறை - தோழி தலைமகன் வாயில் கட்டு உரைத்தது

ஆ) நல்ல தேர்களும், பொய்கைகளும் உடைய தலைவன் என்பதன் மூலம் நீர்வளம் மிக்க நாடு என்பது புலனாகிறது.

(5) அ) கண்ணகி - பாண்டிமாதேவி

ஆ) சிலப்பதிகாரம்

(6) அ) யாரால் - மூத்தவாப்பா யாருக்கு - காசிம்

ஆ) மூத்தம்மா - சிறுகதை

(7) அ) தத்தை விடு தூது

ஆ) பூனை

(8) அ) ஹிட்ச்சாக்

ஆ) கண் இமைப்பது போல காட்சி மாறுதல், மயங்கித் தெளிதல், இருண்டு தெளிதல்

(9) அ) திணை - பொதுவியல்

துறை - கையறுநிலை

ஆ) மாதம்

(10) அ) அரிச்சந்திர புராணம்

ஆ) பதி - சந்திரமதி

பாலன் - லோகிதாசன் (10 x 2 = 20 புள்ளிகள்)

02) (1) அ) இராமனுக்கு இனிய சகோதரன் இலக்குவன். சத்துருக்கள் மற்றும் தனக்கு மூத்த அண்ணன் மலை போன்ற நெடிய தோள்களை உடையவன் குகன் எனும் பெயர் கொண்டவன்.

ஆ) கன்றினைப் பிரிந்த காராம் பசுவின் துயரை ஒத்த கோசலையின் துயரம்

உவமானம் - கன்றினைப் பிரிந்த காராம் பசு

உவமேயம் - இராமனைப் பிரிந்த கோசலை

பொதுத்தன்மை - துயரம்

(2) அ) நாட்டின் பாகத்தையும் அதிகாரத்தையும் தராவிடின் இயமனின் எமதூதர் மகிழ்ச்சி கொள்ள போர் செய்தாயினும் நாட்டினை பெறுதல்

ஆ) பூ இதழ்களை வாயினால் ஊதி வண்டுகள் ஒலித்தற்கு இடமான குளிர்ச்சி பொருந்திய நாடு

(3) அ) வெம்புலிவாய் மானென்ன

ஆ) பொன் இல்லாத தான் விரும்பிய ஆடவருடன் தனித்து விரும்பிச் சேரும் இன்பமே சிறந்தது எனக் கூகூறுகிறார்.

(4) அ) சங்ககாலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே தமிழ் நாட்டு மக்கள் உலக மக்களின் சமய பண்பாட்டு பழக்க வழக்கங்களை வரவேற்று அதற்கொரு இடம்கொடுத்து வாழ்ந்தமை பற்றிக் கூறுகிறார்.

ஆ) ஸ்டொயிக் வாதிகளின் கருத்தை தமிழ்நாட்டில் சங்கப் புலவனின் யாதும் ஊரே யாவரும் கேளீர் எனும் அடியூடாக உலக மனப்பான்மையை ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார்.

(5) அ) சொந்த நாட்டை விட்டுப் பிரிகின்ற சோகமான மனநிலையில்

ஆ) பாரி இருந்தால் பேச்சுக் கொடுப்பார். மதுவிலும் புலாலிலும் களித்திருந்த நட்பு நம்முடையது என்ற கூற்றுக்களினூடாக பாரியோடு தான் பழகிய நினைவுகளை மீட்பதனூடாக

(5 x 4 = 20 புள்ளிகள்)

03) அ)

✶ தருமன் துரியோதனனிடம் நாட்டின் பாகம் அல்லது ஐந்து ஊர் அல்லாவிட்டால் ஐந்து இல்லம் வேண்டு. அதுவும் தர மறுத்தால் அடுபோர் வேண்டு எனக் கூறிய போது வீமன் கொடுங்கோபம் கொண்டு எழுந்து கண்ணனை வணங்கி "தருமன் மானம் இல்லாது இவ்வாறு பேசுவதற்கு நாம் என்ன செய்வது?" என உரைப்பதிலிருந்து அவனது ஆவேசம் வெளிப்பட்டு நிற்கிறது.

✶ தருமன் தனது பொறுமையால் தமது வீரத்தை அடக்கி, எம்மை பேசாமடைந்தகளாக்கி உலகம் உள்ளளவும் தீராத குலப் பழியை ஏற்படுத்தி விட்டான்.

✶ அஸ்தினாப்புரத்தை ஒரு குடையின் கீழ் ஆளத் தருவேன். உன்னை துரியோதனன் வெறுக்காத வண்ணம் அமராபதி நகரத்தை கொடுப்பேன் என்றும் கூறுவது அவனது ஆவேசத்தையும் போரின் மீது கொண்ட விருப்பையும் எடுத்துக் காட்டுகிறது.

✶ போரிலே துரியோதனன் ஆகியோரை வென்று ஆட்சி செய்யத் துணியாமல் தருமன் அறத்தையும் உறவுமுறைகளையும் பாராட்டி பிச்சை கேட்டு நாட்டைப் பெற்று உணவு உண்டு வாழ்வதற்கு துணிந்துள்ளான். எல்லாத் துன்பங்களையும் விட இச்செயல் மிக்க வருத்தத்தை உண்டு பண்ணுகிறது.

- ✶ கண்ணனை தூது செல்ல விட வேண்டாம். பாஞ்சாலி சபதமும் என் சபதமும் தவறாத வண்ணம் நீதியின்றி சொன்ன சொல் தவறிப் பேசும் துரியோதனனிடம் என்னைத் தூதாக அனுப்பு என தருமனிடத்தில் வீமன் கூறுகிறான். இவற்றிலிருந்து அவனது ஆவேசமும் போரின் மீதான ஈடுபாடும் எடுத்துக் காட்டப்படுள்ளது.

ஆ) அத்தினாபுரத்தின் இயற்கை வளச்சிறப்பு

- ✶ செய்வரால் இனம் உகளும் திருநாடு - வயல்களில் வரால மீனினம் உலவும் செல்வம் மிகுந்த நாடு
- ✶ கயிரவமும் தாமரையும் கமழ்பழனக் குருநாடு - ஆம்பல்களும் தாமரைகளும் கமழ்கின்ற வயல்களை உடைய சிறப்பினை உடையது
- ✶ தாது ஊதி அளிமுரலும் தண்பதி - பூ இதழ்களை வாயினால் ஊதி வண்டுகள் ஒலித்ததற்கு இடமான குளிர்ச்சி பொருந்திய நாடு
- ✶ உழவர் முன்றில் தோறும் நந்து ஊரும் புனல்நாடு - உழவர்களின் முற்றங்களில் எல்லாம் நத்தைகள் ஊர்ந்து திரியும் நீர்வளத்தை உடைய நாடு

(8 + 7 = 15 புள்ளிகள்)

**அல்லது**

குகப்படலம்

அ) பரதனின் சிறப்புக்கள்

- ✶ வஞ்சகமான மண்ணாசையை நீக்கியவன் தனது பற்றற்ற தன்மையினால் முனன்ர் ஆட்சி செய்த மன்னர்களைக் கீழ் நிலைப்படுத்தி குணவிசேடத்தால் மேலேறி நின்றவன்
- ✶ தான் பிறந்ததால் இராமனுக்கு கிடைக்க வேண்டிய அரசுரிமையும் கோசலை பெற வேண்டிய அரசுச் செல்வமும் இழக்கப்பட்டதை எண்ணி மனம் வருந்துகிறான்.
- ✶ குகனைச் சகோதரனாக ஏற்று அன்பு செலுத்திய பண்பினை உடையவன்
- ✶ கோசலை, சுமித்திரை ஆகிய தாயார்களிடத்தில் பேரன்பு கொண்டவன்
- ✶ இராமனைக் காட்டிற்கு அனுப்பியமையால் தன் தாயான கைகேயி மீது கோபம் கொண்டவன்.

ஆ)
- ✶ நாட்டை விட்டுக் காடு சென்றமையை துயர் என எண்ணாமல் நலம் என்று கூறுதல் (குகனின் நட்புக் கிடத்தமையால்)
- ✶ “கைவீரக் களிறு அனைய காளை” என உவமை உருவக வாயிலாக குகனின் வீரத்தைப் பாராட்டுதல்
- ✶ “ஐவீரும் ஒருவீராய்” என வேடுவனான குகனை இராமனின் சகோதரனாய் அங்கீகரித்தமையைச் சுட்டுதல்.
- ✶ நீண்ட காலம் நாட்டை அனைவரும் ஒற்றுமையாக ஆளுங்கள் எனப் பராட்டிக் கூறுதல். (8 + 7 = 15 புள்ளிகள்)

04) அ) தருமபுத்திரர்

தருமபுத்திரர் முக்தி உலகம் செல்லும் வழியில் புழுத்த நாய் ஒன்றைக் காண்கிறார். பிற உயிர்களை தம் உயிரிற் கண்ட சமநெறிச் செல்வர் தமக்கும் நாய்க்கும் இடையே ஒற்றுமை காண்கிறார். நாயினை தோளிலே தூக்கிக் கொண்டு முக்தி உலக வாயிலை அடைகிறார். நாயை வெளியே விட்டு உள்ளே புகுமாறு முக்தி உலகம் கூறுகிறது. புழுத்த நாயினுக்கு கிட்டாத முக்தி உலகம் தனக்கும் வேண்டாமென மறுத்துக் கூறுகிறார். அறத்தை இலட்சியமாகக் கொண்டு அறத்தின் பயனாகிய முக்தியையும் உடன் கொண்டு முக்தி உலகம் புகுகின்றார். இதனை மகாபாரத இலக்கியம் எடுத்துக் காட்டுகிறது.

ஆ) மாணிக்க வாசகர்

சிவபெருமானின் திருவருளையே இலட்சியமாகக் கொண்டு நின்று பட்ம், பதவி, பணநிதி ஆகியவற்றை தியாகம் செய்தவர். உன்னுடைய திருவருள் கிடைக்குமாக இருந்தால் நரகம் செல்வதற்கும் அஞ்சமாட்டேன் என்று நரகத்தையும் மோட்சமாக மாற்றி அமைக்கும் சமநோக்கம் படைத்தவராக இலட்சியத்தை பேணி நடந்து கொண்டார். (8 + 7 = 15 புள்ளிகள்)

**அல்லது**

அ) பக்தி பிறநாட்டிற்கு பரவிச் செழித்தமை

இந்தோனேசியாவிலிருந்து பிறம்பாணான் கோயில் பானாத்தாரன் கோயில்கள் கம்பூச்சியாவில் இருக்கும் சில அரண்மனைகள், சிற்பற்கள் தாய்லாந்தில் கொண்டாடப்படும் திருவெம்பாவை திருநாள் உலகம் போற்றும் ஆடவல்லாரின் வடிவம்

ஆ) யாதும் ஊரே யாவரும் கேளிர் எனும் புறநானூற்றுப் பாடலடி யாதானும் நாடாமல் ஊராமல் எனும் திருக்குறளடி சமணம், புத்தம் போன்ற சமயங்களும் தமிழ்நாட்டில் வரவேற்கப்பட்டமை எடுத்துக்காட்டல். பார்ப்பனர்மொழி பெயர் தேயத்தார் யவன புலம்பெயர் மக்கள் தவிர தமிழ் மக்களோடு இனிதாக வாழ்ந்தமை எடுத்துக் காட்டல். (8 + 7 = 15 புள்ளிகள்)

05) அ) மூதுரை கூறும் அடக்கம்

அடக்கமுடையாரை அறிவில்லாதவர் என்று எண்ணக்கூடாது. அடக்கமுடையவரை வெல்ல நினைக்கக்கூடாது. ஓடுமீன் ஓடி உறுமீன் வரும்வரை காத்திருக்கும் கொக்குப் போல அடக்கம் உடையவர் தக்க சந்தர்ப்பம் வரும் வரை காத்திருப்பர்.

ஆ) யானை பலகாலம் பழகி இருந்தாலும் தனக்கு உணவு கொடுத்து பராமரிக்கும் பாகனையே கொல்லுமாதலால் யானை போன்றவருடைய நட்பை விலக்கிக் கொள்ள வேண்டும். நாய் தன்னை வளர்த்தவர் தன் மீது சினந்து எறிந்த ஆயுதம் தம் உடம்பில் வைத்திருந்தாலும் அன்பின் அடையாளமாக அவனைப் பார்த்து வாலை ஆட்டும். (5 + 5 = 10 புள்ளிகள்)

06) அ) சிறுகுதிரை பூட்டப்பட்ட வண்டியில் ஏறிச் செலுத்தி இன்பம் பெறாவிடினும் கையினால் இழுத்து இன்பமடையும் சிறு குழந்தைகள் போல தலைவி தலைவனுடன் கூடி இன்பம் பெறாவிட்டாலும் தன் உள்ளத்தே நட்பைப் பெருகச் செய்து இன்புற்றமை தலைவியின் கைகளில் அணிந்துள்ள வளையல்கள் இறுக்கமாகக் காணப்படுவதால் தலைவி இன்பமாக இருக்கிறாள் என்பது உணர்த்தப்படுகிறது.

ஆ) இளமையின் இனிமை

வண்டல் மண்ணால் செய்யப்பட்ட பாவைக்குப் பூச்சூடி மகிழும் கள்ளங்கபடமற்ற பெண்களோடு கைகோர்த்து, ஒளிவு மறைவின்றி அவர்கள் தழுவிய வழி தழுவியும் அசைந்த வழி அசைந்தும் விளையாடி கபடமற்ற இளமைந்தருடன் சேர்ந்து உயர்ந்த கிளைகளையுடைய மருத மரத்தின் கிளைகளிலே ஏறி கரையிலே நிற்போர் அஞ்சும் படியாக நீர்த்திவலைகள் ‘துடும்’ என ஒலியெழுப்பி மேலே எழும்படியாகவும் நீருக்குள் பாய்ந்து குதித்து, மூழ்கி மணலை எடுத்துக்காட்டிய இளமைப் பருவம் என்று இளமையின் இனிமை எடுத்துக் காட்டப்படுகிறது.

முதுமையின் கொடுமை

பூண்பூட்டப்பட்ட ஊன்றுகோலை ஊன்றிக் கொண்டு தளர்ந்த நடையுடனும் தொடர்ச்சியான இருமலுடனும் இடையிடையே சில வார்த்தைகள் பேசிக்கொண்டு மிகுந்த துன்பத்துடன் ஒழிந்து கொண்டு செல்கின்றது என முதுமையின் கொடுமை எடுத்துக்காட்டப்படுகிறது. (4 + 6 = 10 புள்ளிகள்)

07) அ) மூத்தம்மாவின் தோற்றப் பொலிவு காசிமின் மனவெளிப்பாடாக சித்திரிக்கப்பட்டுள்ளது.

- ✶ கிராமத்தின் முடிசூடாக் குட்டி ராணியாக கிராமத்தின் பொதுமனுஷியாக மூத்தம்மா இருந்த அனுபவம் அவளிடம் அறிவு தேஜஸ் சட்டெனத் தெரியும்.
- ✶ மூத்தம்மாவின் காதில் பெரிய தோடுகள் மேலிருந்து கீழாக நேர் வரிசையில் தொங்கிக் கொண்டிருக்கும். அது அல்லுக்குத்து எனப்படும். கழுத்தில் கருக மணிமாலை மின்னிக் கொண்டிருக்கும். கையில் அகல செப்புக்காப்புகள் என அமர்க்களமாய்ப் பார்க்க அம்சமாய் இருப்பர்.

ஆ) மூத்தம்மா என்ற பெயரின் பொருத்தப்பாடு (தலைமைத்துவம்)

அவளின் கிராமியம் சார்ந்த நாளாந்த நடவடிக்கைகள் (குடும்பப் பெண்)

பேரப்பிள்ளைகளிடம் காட்டும் பரிவின் தொடர்ச்சி (பரிவுடைய பெண்)

பேரப்பிள்ளைகள் அவளிடம் காட்டும் அன்பு

ஊர்க்காரர்கள் அவளிடம் காட்டும் மதிப்பு (நன்மதிப்புடைய பெண்)

பேரப்பிள்ளைகளிடம் அவளின் செல்வாக்கு (தனது நடவடிக்கைகள் ஊடாக புதிய தலைமுறையிடம் ஆளுமையை வளர்த்துக் கொள்ளல்) (5 + 5 = 10 புள்ளிகள்)